# அனகாபுத்தூர் நகராட்சி

**சென்னை – 600 070.**

கூட்ட எண்.63/2020 நாள். 31.8.2020

## தனி அலுவலர் அவர்களின் ஆகஸ்ட் 2020 மாதம் சாதாரண கூட்டப்பொருள்

31.8.2020ம் நாள் திங்கள்கிழமை மாலை 4.30 மணியளவில் அனகாபுத்தூர் நகராட்சி அலுவலகத்தில், அனகாபுத்தூர் நகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களால் நடத்தப்பெறும் சாதாரண கூட்டப் பொருள் .

**பொருள் எண். 1**

அனகாபுத்தூர் நகராட்சியில் ஆகஸ்ட் 2020 மாதத்தில் பதிவு செய்யப்பட்ட பிறப்பு / இறப்பு / மற்றும் இறந்து பிறந்தவைகள் குறித்த விவரம்

**பிறப்பு / இறப்பு / இறந்து பிறந்தவைகள்**

| வ. எண். | மாதம் | பிறப்பு | | இறப்பு | | இறந்து பிறந்தவைகள் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| 1. | ஆகஸ்ட் 2020 | 0 | 0 | 0 | 0 | இல்லை | இல்லை |

**பொருள் எண். 2**

ஆணையர் மற்றும் பொறியாளர் அவர்களின் ஆகஸ்ட் மாதத்தின் நாட் குறிப்புகள்

**அலுவலக குறிப்பு :** கூட்டத்தில் பதிவு செய்யலாம்.

**பொருள் எண். 3**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை – 05 அவர்களின் கடிதம் ந.க.எண்.2571/2017/ஜே1 நாள்.28.11.2017ல், நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் கொசுப்புழு ஒழிப்பு மற்றும் டெங்கு காய்ச்சல் கட்டுப்பாட்டுக்கான சில திருத்திய வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டது. மேற்படி வழிகாட்டுதலில் 300 வீடுகளுக்கு ஒரு கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களை நியமிக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டது.

மேலும் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை அமைச்சர், நகராட்சி நிர்வாக ஆணையர், இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்துகள் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கற்பட்டு மண்டலம் அவர்களின் கடிதங்களில், கொசுப்புழு ஒழிப்பு பணி குறித்த அறிவுரைகள் மற்றும் கொசுப்புழு ஒழிப்பு பணியினை தொடர்ந்து மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டது. இந்நகராட்சியில் கொசுப்புழு ஒழிப்பு பணி மேற்கொள்ள களப்பணியாளர்களை ஒப்பந்தப்புள்ளி கோரி கொசுப்புழு ஒழிப்பு பணிகள் நடைபெற்று வருகிறது. தற்போது மேற்படியான பணிக்காலம் 30.09.2020–ல் முடிவடைய உள்ளதாலும், தற்போது கொரோனா மற்றும் தடுப்பு பணிகள் மேற்கொள்ள

உள்ளதால், மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும், அதற்காகும் தோராய செலவினம் ரூ.35.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**: பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண். 4**

அனகாபுத்தூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் கீழ்க்கண்ட பணிகளை பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | அனகாபுத்தூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் உள்ள வாகன எண். டி. எண். 22 ஏயு 2976–ல் ஏற்பட்ட பழுதுகளை நீக்கம் செய்தல் பணி | 1.70 |
| 2. | அனகாபுத்தூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் உள்ள வாகன எண். டி. எண். 22 ஏயு 3732–ல் ஏற்பட்ட பழுதுகளை நீக்கம் செய்தல் பணி | 0.80 |
| 3. | அனகாபுத்தூர் நகராட்சி பொது சுகாதார பிரிவில் கொசுப்புழு ஒழிப்பு பணி மேற்கொள்ள பெரிய புகை போக்கி இயந்திரத்தினை ஏற்றி செல்ல டாடா ஏஸ் வாகனம் சப்ளை செய்தல் பணி | 8.50 |

**அலுவலகக்குறிப்பு**: மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண். 5**

14.08.2020ம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| **தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2020–21** | | | | |
| 1 | வார்டு எண்.4 – குருசாமி நகர் 4வது, 1வது குறுக்கு தெரு, வார்டு எண்.5 – சுப்ரமணிய பாரதி தெரு, வார்டு எண்.9 – தியாகராய முதலி தெரு, வார்டு எண்.16 – சீனிவாசபுரம் 2வது மெயின் ரோடு, வார்டு எண்.17 – கன்னியம்மன் கோயில் தெரு ஆகிய பகுதிகளில் தார் சாலை அமைத்தல் மற்றும் வார்டு எண்.2 – கருணாநிதி நகர் 3வது குறுக்கு தெரு, வார்டு எண்.5 – பாலாஜி நகர் 12வது தெரு, பாலாஜி நகர் 3வது மெயின் ரோடு, வார்டு எண்.17 – பாரி நகர் | 140.00 | திரு. ஆர். மணிகண்டன்<br>திரு. பி. சந்திரன் | 4.95 % அதிகம்<br>27.94 % அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | வாசுகி தெரு ஆகிய பகுதிகளில் சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | | | |
| 2. | வார்டு எண்.2 – பம்ப் அவுஸ் ரோடு, வார்டு எண்.4 – வெங்கடேஸ்வரா நகர் திருவள்ளுவர் தெரு, வார்டு எண்.10 – யாதவாள் தெரு, வார்டு எண்.13 – வ.உ.சி தெரு ஆகிய பகுதிகளில் தார் சாலை அமைத்தல் மற்றும் வார்டு எண்.5 – பாலாஜி நகர் 15வது தெரு, திருநகர் அண்ணா தெரு, வார்டு எண்.7 – அண்ணா நகர் 2வது குறுக்கு தெரு, அண்ணா நகர் 4வது தெரு, அண்ணா நகர் 8வது தெரு மற்றும் வார்டு எண்.4 கண்ணகி குறுக்கு தெரு ஆகிய பகுதிகளில் சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 160.00 | திரு. பி. சந்திரன்<br>திருமதி. வி. மீனாள் | 4.95 %<br>அதிகம்<br>5.08 %<br>அதிகம் |

<u>**அலுவலகக்குறிப்பு**</u>: அதிகத்தில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதி வழங்கலாம்.

2.மேற்படி மதிப்பீட்டு தொகைக்கு கூடுதலாகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதியளிக்கலாம்.

தனி அலுவலர்
அனகாபுத்தூர் நகராட்சி